# ஜூன் மாதம் - 2016
# ஆயர்மடல்

மூவ்வோரு கடவுளின் திருப்பெயரில் உங்களை வாழ்த்துக்கிறேன். நம் திருச்சபை மாணவ மாணவிகள் தேர்வில் பெற்ற வெற்றிக்காக உங்களை பாராட்டுகிறேன். ஆரம்பிக்கப்படும் புதிய கல்வி ஆண்டு அனைவருக்கும் சிறப்பான எதிர் காலத்தை கொண்டு வரட்டும்.

நமது திருச்சபையின் பல்வேறு எதிர்கால நலத்திட்டங்களை நினைத்து திருச்சபையின் வளர்ச்சியிலும் இறைமக்களின் ஆவிக்குரிய மறுமலர்ச்சியிலும் பூரணமாக வளர நம்மை ஈடுபடுத்திக் கொள்வதற்கு பரிசுத்த ஆவியானவர் நம்மில் செயல்பட ஆசீர்வாதத்தோடு நம்மை ஒப்புவிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ஐக்கிய குழுக்களும் மற்ற சங்கங்களும் திருச்சபையினுடைய ஆவிக்குரிய அமைப்பு வளர்ச்சிக்கும் அமைப்பின் எதிர்கால திட்டங்களுக்கும் நீங்கள் உதாரத்துவத்தோடு ஈடுபடுவது மட்டுமல்ல, உங்கள் அனுதின ஜெபங்களில் தனித்தனியாக, குடும்பம் குடும்பமாக ஈடுபடுவது இன்றியமையாதது என்பதை ஆழ்ந்த அனுபவத்தோடு எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். நமது திருச்சபையின் சேகர குழுவாக, திருச்சபையின் அமைப்புக்கும் எதிர்காலத்தின் முன்னேற்றத்திற்கும் ஆர்வத்தோடு சிந்தித்து தங்களை ஆதாரப்பூர்வாமான செயல்களில் ஈடுபட பரிந்துரை செய்யப்படுகிறது. வளர்ச்சிக்கு ஒவ்வொரு தனிப்பட்ட குடும்பமும், ஆத்துமாவும் ஜெப வாஞ்சையுடன் திருச்சபையின் மொத்த வளர்ச்சியில் ஆர்வத்தோடு ஈடுபட உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். கடந்த மாதம் நடைபெற்ற நமது திருச்சபையின் ஊழியங்களில் திரளாய் பங்கு பெற்றதற்காக என்னுடைய நன்றி களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாதம் முழுவதும் நடைபெறும் ஊழியங்களில் அனைவரையும் ஈடுபடுத்தி கொள்ள அழைக்கப்படுகிறிர்கள்.

அருட்பணியில் உங்கள் ஆயர்
**Rev.Daniel Chelladurai**



# ஜூன் மாத ஆராதனை ஒழுங்குகள்

| நாள் | நேரம் | தலைப்பு | வேதபாடங்கள் | செய்தியளிப்பவர் |
|---|---|---|---|---|
| 01.06.2016 | காலை 5.30 மணி | வாக்குத்தத்த ஆராதனை | - | அருள்திரு. டேனியல் செல்லதுரை |
| 05.06.2016 | காலை 8.30 மணி | திருவிருந்து ஆராதனை இறையச்சம் என்பது ஞானத்தின் தொடக்கம் | I அரசர்கள் 3:3 - 14 I யோவான் 5:13 - 21 | அருள்திரு. டேனியல் செல்லதுரை |
| 12.06.2016 | காலை 8.30 மணி | செயல் பாட்டில் கிறிஸ்துவுடன் வாலிபர்கள் | தானி 1:1-15 யோவான் 1 : 35 -42 | திரு.பால் பன்னீர் செல்வம் |
| 19.05.2016 | காலை 8.30 மணி | சீடராக்குங்கள் | I அரசர்கள் 19:15 - 21 யோவான் 1 : 35 -42 | ஆயர் |
| 26.05.2016 | காலை 8.30 மணி | இறைமக்கள் கிறிஸ்துவின் மந்தை | தொடக்க நூல் 35:1-7 யோவான் 10:1-6 | திரு.A.ஜோசப் |

June '2016

## <u>என் மேய்ப்பர் இயேசுகிறிஸ்துதான்</u>

## <u>பாமாலை - 262</u>

## என்தன் ஜீவன் இயேசுவே

### (The King of Love my shepherd is)

"கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடையேன்." சங் 23.1

கிறிஸ்தவ ஆலய ஆராதனைகளில் பதினைந்தாம் நூற்றாண்டு வரையிலும் திருமறையிலுள்ள சங்கீதங்களையே பாடல்களாகப் பாடி வந்தார். இப்போது பல சபைகளில் சங்கீதங்கள் இராகத்துடன் பாடல்களாகவே பாடப்படுகின்றன. அக்காலத்திலும் சில பக்தர்களால் சில பாடல்கள் எழுதப்பட்டிருந்தாலும். அவை வெகுவாக ஆலய ஆராதனைகளில் பாடப்படவில்லை பதினாறாம் நூற்றாண்டின் மத்தியில் பல சங்கீதங்கள் ஞானப்பாடல் ரூபத்தில் அமைக்கப்பட்டு (Metrical Psalms) அவற்றிற்கேற்ற இராகங்களுடன் பாடப்பட்டன. இக்காலத்திலும் சங்கீதங்களை மாறி மாறி வாசிப்பதற்குப் பதிலாக ஸ்காட்லண்டு சபை முதலிய பல சபைகளில் சங்கீதப் பாடல்களையே பாடி வருகின்றனர். பின்னர் 1542 ஆம் ஆண்டு மார்ட்டின் லூதர் இப்பாடல்களைப் புத்தக ரூபமாக வெளியிட்டார். சில ஆண்டுகளுக்குப் பின், 1562-ல் ஜெனீவன் சங்கீதப் பாடல்கள் (Genevan Psalter) என்னும் பெயரால் ஒரு பாட்டுப் புத்தகம் வெளியிடப்பட்டது. இதிலுள்ள பாடல்களே கிறிஸ்தவ ஆலய ஆராதனைகளிலும் மற்றும் வழிபாடுகளிலும் பாடப்பட்டுவரும் பாடல்களின் ஆரம்பமாகும்.

தற்காலத்திலும் சங்கீதங்களையே அடிப்படையாகக் கொண்ட பல பாடல்கள் நமது பாட்டுப் புத்தகங்களிலுண்டு. இதற்கு உதாரணங்கள்

பூலோகத்தாரே யாவரும் பா 9 (சங்.100)
மா மாட்சி கர்த்தர் சாஷ்டாங்கம் செய்வோம் -பா 24-(சங்.104)
ஆ மேசியாவே வாரும் பா 84 (சங் 72)
கர்த்தாவே யுக யுகமாய் - பா 253 (சங் 90)
களிப்புடன் கூடுவோம் - பா 254 (சங் 136)
பகலோன் கதிர் போலுமே - பா.212 (சங்.72)
வாழ்நாளில் யாது நேரிட்டும் - பா 327 (சங்.34)
நீரோடையை மான் வாஞ்சித்து -பா 375 (சங்.42)

என் மேய்ப்பர் இயேசுகிறிஸ்துதான் என்னும் பாடல் 23 -ஆம் சங்கீதத்தைத் தழுவி எழுதப்பட்டது.



ஆங்கிலத் திருச்சபைகளில் உபயோகப்பட்டுவரும் (Hymns Ancient and Modern) என்னும் பாட்டுப் புத்தகம் தொகுக்கப்படும் போது அதின் தொகுப்பாளராக ஸர்ஹென்ரி பேக்கர் நியமிக்கப்பட்டார். அவர் அப்புத்தகத்தில் பல சங்கீதப்பாடல்களைச் சேர்க்க விரும்பி, பல பாடல்களைச் சேகரித்தார். 23-ஆம் சங்கீதத்தைத் தழுவிய சில பாடல்களும் கிடைத்தன. ஆனால் அவை ஒன்றும் அவருக்குத் திருப்தியளிக்கவில்லை. ஆகவே இச்சங்கீதத்தைத் தழுவிய பாடல் ஒன்றைத் தாமே எழுதத் தீர்மானித்து என் மேய்ப்பர் இயேசு கிறிஸ்துதான் என்ற பாடலை 1859-ல் ஆங்கிலத்தில் எழுதினார். அவரால் எழுதப்பட்ட ஏராளமான பாடல்களில் இப்பாடலே மிகச் சிறந்ததாகப் போற்றப்படுகிறது.

ஸர் வில்லியம் ஹென்றி பேக்கர் 1821 ஆம் ஆண்டு லண்டன் மாநகரில் பிறந்தார் அவரது தந்தை ஆங்கிலக் கப்பற்படையில் தளபதியாக (Admital) பணியாற்றியவர். ஹென்ரி பேக்கர் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் திரித்துவக் கல்லூரியில் பயின்று. 1844-ல் பி.ஏ. பட்டமும் 1847-ல் எம்.ஏ. பட்டமும் பெற்றார். 1846-ல் அவர் குரு அபிஷேகம் பெற்று, தமது திருப்பணியை ஆரம்பித்தார். 1851-ஆம் ஆண்டு ஹெரிபோர்டுஷயர் மாகாணத்தில் மங்க்லண்டு நகரின் பிரதமகுருவாக நியமனம் பெற்றார். இச்சபையில் அவர் இருபத்தாறு ஆண்டுகள் பணியாற்றி தன் வாழ்க்கையின் மிக்க பாகத்தைப் பாடல்கள் எழுதுவதிலும் பாட்டுப் புத்தகங்கள் இயற்றுவதிலும் செலவிட்டார். கிறிஸ்தவ உலகத்திற்கு அவர் செய்த அரிய சேவை அவர் இயற்றிய (Hymns Ancient and Modern) என்னும் பாட்டுப் புத்தகமாகும். இதில் அவரே எழுதிய 37 பாடல்கள் உண்டு. அவர் எழுதிய இதர பாடல்களில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டவை.

நாதன் வேதம் என்றும் எங்கள் வழிகாட்டும் பா 177
கர்த்தர் நீர் வசிக்கும் ஸ்தலத்தை நேசிப்போம் - பா 221
விண் வாசஸ்தலமாம் பேரின்ப வீடுண்டே பா.407

ஸா ஹென்றி பேக்கர் 1877 ஆம் ஆண்டு தமது 56-ஆம் வயதில் காலமானார் தமது மரணப்படுக்கையில் அவர் கடைசியாகப் பேசிய வார்த்தைகள் இப்பாடலின் மூன்றாவது கவியாகும். அது கீழ்கண்டவாறு ஆங்கிலத்தில் அழகாக அமைந்துள்ளது.

'Perverse and foolish oft I straved
But yet in love He sought me,
And on His shoulder gently laid,
And home rejoicing, brought me'.

ஆதாரம்:
1.கிறிஸ்தவ கீதங்களின் வரலாறு - **Mr.D.EBENKAN**
2. Various internet articles

## BIRTHDAYS IN THE MONTH OF JUNE

| | |
|---|---|
| June 1 | Mrs. Saroja Martin |
| June 2 | Mr. R. Joseph |
| | Mrs. J. Linda Joy Grace |
| June 3 | Mrs. Sunitha Viola |
| | Mr. P. Joshua Sam Immanuel |
| June 5 | Mrs. J.Vigila Gnana Rose |
| | Mr. A. Godwin |
| | Miss. Samyuktha |
| June 7 | Mr. Vinod Gabrial |
| | Mrs. Sugirtham |
| June 8 | Miss. Benicia David |
| | Mrs. Percy Rajkumar |
| | Mrs. Sujatha |
| June 9 | Mr.M.Luxon Samuel |
| June 10 | Mr.M.Praveen Babu |
| June 11 | Mr. J. Moses Vivekanandan |
| | Mrs. R. Margaret |
| June 12 | Mr. M. Raju |
| | Mr. P. Jonathan Joseph |
| | Mr.Manoj Kumar Joseph |
| June 14 | Mrs. J.Baby Kamala |
| June 15 | Mr.P. Sundaram |
| | Mr. P.Jawahar |
| June 16 | Mr.P.Amurtharaj |
| | Mr. Yesu Dhas |
| June 18 | Mr .J.Joseph Solomon |
| | Mr. R.Sudesh Babu |
| June 19 | Mrs.Beautlin Vigil |
| June 20 | Mrs.Hepsiba Pari |
| | Mr. Rajesh |
| June 21 | Mr. S. Alwyn Raj |
| | Master. Meshak Joyal |
| | Mrs. Abisha Annsmith |
| June 22 | Mrs.Annie Pushpam |
| | Mrs. P. Eval Mona Metilda |
| | Mr. I . Solomon Rufus |
| | Master. E. Allen Jones |
| June 25 | Mrs. Hannah Suresh Kumar |
| June 26 | Mrs. Flora Nirmala |
| | Mr. V. Robin Bennet Singh |
| | Mr. J. Joy Rachel Shalom |
| June 29 | Mrs. J.Esther Jayamani |
| | Master. J. Johan Sam |
| June 30 | Mrs. Mercy Alex |
| | Mr. P. Jerald Mattew |
| | Mr. J. Justin Kumar |
| June 31 | Mrs. Y.Sukhi |



## WEDDING DAYS IN JUNE

| | |
|---|---|
| June 6 | Mr. A. Aron john Wesly and Mrs. Jessi |
| | Dr.R. Anish Daniel & Adv.Kamalini Anish |
| June 7 | Mr.T.Wilson & Mrs.Baby Kamala |
| June 10 | Mr.M. Raju & Mrs. R. Epsipa |
| | Mr.Y.Israel & Mrs. Mary Kala |
| June 11 | Mr.Richard Murugesan & Mrs. R. Margaret |
| | Mr.M.Ponnappan & Mrs.N.Padma |
| June 12 | Mr.Vasudev Rao & Mrs. Esther Vanaja |
| June 16 | Mr.K.Emerson & Mrs. Angel Emerson |
| June 18 | Mr. A. P. Joseph Ramanathan & Mrs. J.Esther |
| June 27 | Mr.E. Jebakumar & Mrs. Sunitha Vayola |

**பிறந்த நாள் மற்றும்
திருமண நாள்
கொண்டாடும்
அனைவருக்கும்
திருச்சபையின்
சார்பில்
வாழ்த்துக்களை
தெரிவித்துக்
கொள்கிறோம்!**



## இறையன்பு

ஆத்துமத் தாகத்தால் நேஞ்சம் களங்கிய இயேசுவே!
பிதாவே!, இவர்கள் செய்வது இன்னதென அறிகிலர்!
இவர்கள் குற்றங்களை மன்னியும் எனச் சிலுவை மரத்தில்
எங்களுக்காகப் பிதாவிடம் விண்ணப்பித்த இரட்சகரே!
மனிதக்குலத்தை மீட்க சிலுவையில் உயிர்நீத்த அன்பரே!
மரணத்தை வென்று மூன்றாம் நாள் உயிரோடெழுந்த இயேசுவே!
மறுமையின் நிச்சயத்தைத் தந்த நல் மீட்பரே!
உயிரோ டெழுந்தறும்மைக் கண்டும் விசுவசியாத
றும்சீடறை மனம் வருந்திக் கடிந்த இயேசுவே!
தயவாய் எம்பிழைகள் பொறுத்தருள் செய்வீராக
உலகெங்கும் உமது வேதத்தை அறிவித்துச் சீடராக்க
கட்டளையிட்ட எங்கள் கருணைக்கடலே!
பரிசுத்த ஆவியால் எம் இதயங்களை நிரப்பியருளும்.
நாங்கள் நமது கட்டளைகளை என்றும்
கைக்கொள்ள கிருபை ஈந்து வழிநடத்தும்
உமது பரிசுத்த நாமத்திற்கு கென்றும் மகிமை உண்டாவதாக!
அல்லேலூயா! அல்லேலூயா! அல்லேலூயா! அமென்.

கிறிஸ்துவில் அன்புச் சகோதரி
புலவர் **புஷ்பா ஞானராஜ்** M.A
உறுப்பினர் எண் - 140

# வேத வினா - விடை போட்டி

**ஜூன் மாத கேள்விகள்**
**முழு வேதாகமம் ( வசன ஆதாரம் தரவும் )**
**யார் யாரிடம் சொன்னது?**

1. கர்த்தர் அதைப் பார்ப்பார், அதை கேட்பார்
2. உத்தமனுக்கும் கர்த்தர் துணை?
3. நீ எரிச்சலாயிருக்கிறது நல்லதா?
4. குறித்த காலத்திற்கு தரிசனம் இன்னும் வைக்கப் பட்டிருக்கிறது; முடிவில் அது விளங்கும்.
5. வேளைக்கு முன் எங்களை துன்புறுத்த வந்தீரோ?
6. எந்த மட்டும் இந்த மனுஷர்கள் நமக்கு கண்ணியாயிருப்பார்கள்?
7. நீ எங்களை விட்டு போய்விடு, எங்களைவிட அதிக பெலலுள்ளவனாய் இருக்கிறாய்?
8. கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே?
9. கொத்துகிறதற்கு எனக்கு பெலனில்லை, இரக்கவும் வெட்கப்படுகிறேன்?
10. 650 + 100 + 100 + 20 + 2 = ?

**விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 20-06-2016**

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி


**C.S.I. இயேசுவில் புதுவாழ்வு ஆலயம்**
எண் 55, 3வது மனை பிரிவு,
ஆசிரியர் குடியிருப்பு,
லட்சுமிபுரம், சென்னை – 600 099.


குறிப்பு: தெளிவான முகவரியுடன்
சந்தா எண்ணையும் சேர்த்து எழுதி அனுப்பவும்


csinewlifeinjesus@gmail.com    9444 633129
www.csinewlifeinjesus.org


## பாராட்டுகிறோம்!

2016 ஆண்டில் நடைபெற்ற தேர்வில் வெற்றி பெற்ற அனைத்து திருச்சபை மாணவ மாணவிகளையும் திருச்சபையின் சார்பாக பாராட்டுகிறோம்



# சென்ற மாத போட்டியின் விடைகள்

1. 40 அப்போஸ்தலர் 1:3
2. 50 அப்போஸ்தலர் 2: 1 – 4
3. அப்போஸ்தலர் 2:42 – 47
4. அப்போஸ்தலர் 2 : 37 – 41
5. அப்போஸ்தலர் 4 : 5,6,7
6. அப்போஸ்தலர் 3: 6
7. அப்போஸ்தலர் 3 : 1
8. அப்போஸ்தலர் 5 : 34
9. அப்போஸ்தலர் 7 : 2, 3, 4
10. அப்போஸ்தலர் 23: 23

## சரியான விடை எழுதியவர்கள்

1. திருமதி. எஸ்தர் சந்தோஷ்ராஜ்
2. திருமதி. கலா சுந்தரகுமார்
3. திருமதி. ஜாய்ஸி விமலா
4. திருமதி. ஸ்விட்டிலீன் ரிச்சர்ட்
5. திருமதி. ஷைனி ரிச்சர்ட்
6. திருமதி. ஸ்டெல்லா ராஜ்

## படித்ததில் பிடித்தது

ஒரு கவனக் குறைவான வார்த்தை சர்ச்சையில் முடியும்
ஒரு கடுமையான வார்த்தை வாழ்க்கையை முறிக்கும்
ஒரு கசப்பான வார்த்தை வெறுப்பை வளர்க்கும்

- A.Joseph

## வருந்துகிறோம்!

திரு. ஞானராஜ், திரு. ஜெயசீலன் அவர்களின் தாயார் திருமதி. மணிமுத்து அம்மாள் கடந்த மாதம் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். ஆறுதலின் தேவன்தாமே தாயாரை இழந்து தவிக்கிற குடும்பத்திற்கு ஆறுதல் தருவராக

# அன்பின் ஏக்கம்

ஒவ்வொரு மனிதனுக்குக்குள்ளும் ஒரு பெரிய அன்புத் தாகமும் ஏக்கமும் உள்ளது. எவ்வளவுதான் நேசிக்கப்பட்டாலும், தான் போதுமான அளவு நேசிக்கப்படவில்லை என்ற உணர்வும், நான் இன்னும் அதிகமாக நேசிக்கப்பட வேண்டும் என்ற வாஞ்சையும் அநேகருடைய இருதயத்திற்குள் ஆழமாகப் புதைந்து கிடைக்கின்றன.

பல கணவன்மார்கள் தங்கள் மனைவிமார்களை சரியாக நேசிக்கவில்லை என்ற குறைபாடு பரவலாகக் காணப்படுவது உண்மை. அதே வேளையில் அநேகர் தங்கள் மனைவிகளை நன்றாகத்தான் நேசிக்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கோ ஒரு திருப்தி ஏற்படுவதில்லை. இன்னும் அதிகமாய் அவர் நேசித்திருக்க வேண்டும். இன்னும் அவர் சற்று அதிகக் கரிசனை கொண்டிருக்க வேண்டும் என்ற எண்ணங்களே அவர்களுக்குள் காணப்படுகிறது. பல கிறிஸ்தவ சகோதரிகளின் ஜெபங்கள் கூட தங்கள் கணவன்மார்களின் அன்பை அதிகமாகப் பெறுவது தொடர்பாகவே உள்ளது.

ஆனால் இங்கே பிரச்சனை கணவன்மார்களிடம் அல்ல. மனைவிமார்களிடமே அது உள்ளது. அவர்களின் எதிர்பார்ப்பு அதிகமானது. ஒரு சராசரி மனிதனால் அது சந்திக்க இயலாதது. மனிதன் அன்பு காட்டுவதிலும், வெளிப்படுத்துவதிலும் மிகவும் பலசாலி அல்ல. அவன் பலவீனன். அவனிடம் அளவுகளை மிஞ்சி எதிர்பார்ப்பது பயன்தராதது. இன்னும் அதிகமாக அன்பை நிரூபித்தால்தான் நேசிப்பதாக நம்புவேன் என்பது போல நடந்து கொள்வது, கணவன் மேல் அளவுக்கு அதிகமான பாரத்தை வைப்பது போன்றதாகும்.

தேவன் மட்டுமே அன்பின் ஊற்றாகயிருக்கிறார். அவர் மட்டுமே நாம் எதிர்பார்க்கிற அளவிற்கு அன்பை நமக்கு காண்பிக்க முடியும். அவரிடம் மட்டுமே நம்முடைய அன்பின் தாகங்கள் தீர்க்கப்பட முடியும். அவர் மட்டுமே நம்மை நன்றாக நேசிக்கப்டுகிற நம்பிக்கையின் நிலைக்குக் கொண்டு வர முடியும்.



நம்மில் அநேகர் நேசத்தை மிகுதியாகப் பெற முடிந்த இடத்தை விட்டு விட்டு பெற முடியாத இடத்திலே அதனை எதிர்பார்த்து ஏங்கி நிற்கிறார்கள். கணவனின் அன்பு, மனைவியின் அன்பு, பிள்ளைகளின் அன்பு, பெற்றோரின் அன்பு என மனித அன்பிற்காகவே ஏங்கிக் கொண்டிராமல், தேவ அன்பிற்காக ஏங்க வேண்டும். தேவ அன்பு இதயத்தில் பாய ஆரம்பித்து விட்டால் மனித அன்பிற்காக மனம் அங்கலாய்க்காது. தம்முடைய ஜீவனையே தந்து நேசித்த கர்த்தரின் அன்பை சாதாரணமாக எண்ணி, மனித உறவுகளின் அன்பையே தேடி அங்கலாய்த்தால் அது நமக்கு ஒரு போதும் திருப்தியை கொண்டு வராது.

## 8 Best Moments in Life

1. Giving the 1st Salary to your parents.
2. Thinking your love with tears.
3. Looking old photos & smiling.
4. A Sweet & emotional chat with friends.
5. Holding hands with your loved ones for a walk.
6. Getting a hug from one who cares you.
7. 1st Kiss to your child when he / she is born.
8. The moments when your eyes are filled with tears after a big laugh.

# உயிரெழுத்தில் ஜெபியுங்கள்

**அ**னுதினமும் ஜெபியுங்கள்

**ஆ**வியிலே நிறைந்து ஜெபியுங்கள்

**இ**டைவிடாமல் ஜெபியுங்கள்

**ஈ**ந்து ஜெபியுங்கள்

**உ**பவாசித்து ஜெபியுங்கள்

**ஊ**க்கமாக ஜெபியுங்கள்

**எ**ப்பொழுதும் ஜெபியுங்கள்

**ஏ**க்கத்தோடு ஜெபியுங்கள்

**ஐ**க்கியிற்றில் பெலப்பட்டு ஜெபியுங்கள்

**ஒ**ன்றாக கூடி ஜெபியுங்கள்

**ஓ**ட்டத்தில் வெற்றி பெற ஜெபியுங்கள்

**ஔ**வுதமான நாவினால் ஜெபியுங்கள்

ஜெபியுங்கள்! ஜெபியுங்கள்! ஜெபியுங்கள்!

– முகநூல் பதிவில் இருந்து
எடுக்கப்பட்டது.

சங்கீதம் ஓர் அலசல் அடுத்த இதழில் தொடரும்



# உம் சித்தம் நடக்க வேண்டுமே!

உம் சித்தம் நடக்க வேண்டுமே!
காரிருளில் நடக்கையிலே!
நீர் என்னை காக்கையிலே!
என் வாழ்க்கையிலே!

உம் சித்தம் நடக்க வேண்டுமே!
என் வாயின் வார்த்தையிலே!
என் கையின் செயல்களிலே!
என் இருதய சிந்தனைகளிலே!

உம் சித்தம் நடக்க வேண்டுமே!
எம் வார்த்தை கற்கையிலே!
உம் வேதம் பிரசங்கிக்கையிலே!
உம் வசனப்படி நடக்கையிலே!

உம் சித்தம் நடக்க வேண்டுமே!
என் படிப்பிலே என் பணி ஸ்தலத்திலே!
என் குடும்பத்திலே என் திருச்சபையிலே!
உம் சுதந்திரத்தை பெற்று கொள்கையிலே!

உம் சித்தம் நடக்க வேண்டுமே!
அன்பிலே!
ஐக்கியத்திலே!
அரவணைப்பிலே!

உம் சித்தம் நடக்கட்டுமே!
உன் பிரசன்னம் இறங்கட்டுமே!
உம் கிருபை பெருகட்டுமே!
உம்  இரக்கம் வளரட்டுமே!

உம் சித்தம் நடக்கட்டுமே!
இன்பத்திலும் துன்பத்திலும்மே!
மரணத்திலும் மறுமையிலுமே!
இப்பொழுதும் எப்பொழுதுமே!!!

**- Nishada's**